Embassy of the United States of America
Colombo

# PRESS RELEASE

Public Affairs Section
Tel: +94 (1) 249-8100 ● Fax: +94 (1) 244-9070
Email: shenjy@state.gov ● http://lk.usembassy.gov

Release No. 20170604T

## இலங்கையின் வெள்ள நிவாரணத்திற்கு ரூ. 350 மில்லியன் வழங்கும் அமெரிக்க மக்கள்

*கொழும்பு, ஜூன் 4:* இலங்கையில் வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு சுமார் ரூ. 350 மில்லியன் (2.3 மில்லியன் அமெரிக்க டொலர்) மனிதநேய உதவியாக அறிவிப்பதற்கு, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கேஷப் அவர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களுடன் இணைந்து கொண்டார். பாதுகாப்பான குடிநீர், தேகாரோக்கிய தொகுதிகள், அவசர கால நிலையின் போது உறைவிடப் பொருட்கள், வீட்டுத் திருத்தப் பொருட்கள் மற்றும் நோய்களை தவிர்ப்பதற்கு முக்கியமான சுகாதார பராமரிப்பு சேவைகளை வழங்குவதற்கு இந்த உதவியானது பயன்படும். இலங்கையின் அரச சார்பற்ற நிறுவனங்களில் ஒன்றான சர்வோதயா அமைப்பின் ஊடாக இந்த உதவியில் ஒரு பகுதி வழங்கப்படும்.

*“எமது இரண்டு நாடுகளினதும் வரலாறு முழுவதிலும், அமெரிக்காவும், இலங்கையும் மிகவும் நெருக்கமான பிணைப்பினை பகிர்ந்து கொண்டுள்ளன”* என தூதுவர் கேஷப் தெரிவித்தார். *“தேவையான சந்தர்ப்பங்களில் இரு நாட்டு மக்களும் ஒருவருக்கு ஒருவர் துணையாக இருந்துள்ளனர்”* என அவர் மேலும் குறிப்பிட்டார்.

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிறுவனத்தின் (USAID) ஒரு அங்கமான வெளிநாட்டு அனர்த்த உதவிக்கான அமெரிக்க அலுவலகம் (OFDA) ஊடாக இந்த உதவி வழங்கப்படும். 2001 முதல் அனர்த்த உதவி மற்றும் அனர்த்த ஆபத்து குறைப்பில் சுமார் ரூ 19 பில்லியனை (125 மில்லியன் அமெரிக்க டொலர்) OFDA வழங்கியுள்ளது.

நிவாரணப் பொருட்களுக்கு மேலதிகமாக, USAID/OFDA மற்றும் அமெரிக்க தூதரகத்தைச் சேர்ந்த Civil Military Support Element (CMSE)இன் அனர்த்த சேவை நிபுணர்கள், அமெரிக்க மறுசீரமைப்பு முயற்சிகளை ஒழுங்கமைக்க உதவுதல், பாதிப்பு மதிப்பீடுகளை முன்னெடுத்தல், மற்றும் களத்தின் தேவையை மதிப்பீடு செய்வதற்கு இலங்கை அரசாங்க அதிகாரிகள் மற்றும் மனிதநேயப் பங்காளர்களுடன் பணியாற்றுதல் என்பவற்றில் ஈடுபட்டுள்ளனர். U.S. Army Reserve Officer Training Corps (ROTC) துருப்பினர் மற்றும் அமெரிக்கத் தூதரகத்தின் Pacific Command (PACOM) Augmentation Team என்பன CMSE அனர்த்த முகாமைத்துவ நிலையம், மற்றும் உள்ளூர் அதிகாரிகளுடன் இணைந்து களுத்துறை மாவட்டத்தில் வெள்ளப்பெருக்கினால் சேதமடைந்த பாடசாலைகளை சுத்தப்படுத்தல் மற்றும் திருத்தல் என்பவற்றில் அமெரிக்க இராணுவ பொறியியலாளர்கள் மற்றும் ROTC துருப்புக்கள் ஈடுபட்டுள்ளனர். இளைஞர் தலைமையிலான Sri Lanka Unites அமைப்பிற்கும் அமெரிக்கத் தூதரக சமுதாயத்தின் குடும்பங்கள் தனிப்பட்ட நன்கொடை வழங்கியுள்ளன.

எதிர்கால அனர்த்தங்களின் ஆபத்தினை குறைப்பதற்கு நீண்ட கால செயற்றிட்டங்களுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கின்றது. பாதுகாப்பான குடிநீரை உறுதி செய்வதற்கு அனர்த்த விரிதிறன் நீர் முறைமைகள், விரைவான வெள்ளப் பெருக்கு எச்சரிக்கை முறைமைகள் என்பவற்றை வழங்கியுள்ளதுடன், அனர்த்த மறுசீரமைப்பு மற்றும் முகாமைத்துவ ஆற்றலை வலுப்படுத்துவதற்கு அரசாங்கம் மற்றும் உள்ளூர் சமுதாயங்களுடன் USAID பணியாற்றியுள்ளது. மேலதிகமாக, 2011ஆம் ஆண்டு முதல் அமெரிக்கத் தூதரகமானது, இயற்கை அனர்த்தங்களால் இடம்பெயர்ந்தவர்களின் தற்காலிக புலகிடங்களாக இருக்கும் பாடசாலைகள் மற்றும் சுகாதார நிலையங்களின் நிர்மாணத்திற்கு ரூ.2.3 பில்லியன் (15 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) வழங்கியுள்ளது.

சூழ்நிலையை கண்காணித்து வரும் அமெரிக்கத் தூதரகம், மேலதிகத் தேவைகளை அடையாளம் காண்பதற்கு இலங்கை அரசாங்கத்தின் அனர்த்த நிவாரண அதிகாரிகளுடன் தொடர்ந்தும் நெருக்கமாக செயற்பட்டு வருகின்றது.

###